

சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் உதகை காந்தல் கால்பந்து அகாடமி நடத்தும் அகில இந்திய ஐவர் கால்பந்து போட்டியினை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசாவுடன் இணைந்து கலந்துகொண்டு பார்வையிட்டு கால்பந்தாட்ட வீரர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

### புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் - கறம்பக்குடி தேர்வுநிலை பேரூராட்சி,

# கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் பல்வேறு திட்டப் பணிகள் !

### அமைச்சர்கள் கே.என்.நேரு - எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப் பாண்டியன் திறந்து வைத்தனர்!

புதுக்கோட்டை, மார்ச் 19-

புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர், கறம்பக்குடி தேர்வுநிலை பேரூராட்சிகளில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பிலும் மற்றும் கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் 15.03.2024 அன்று பல்வேறு முடிவுற்றத் திட்டப் பணிகளை திறந்து வைத்தார்கள்.

பின்னர் அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களும் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற உன்னத நோக்கத்தில் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், ஏழை, எளிய பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர் வசதி, கழிவறை வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் கீரனூர் தேர்வுநிலை பேரூராட்சி, சுந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் மற்றும் கறம்பக்குடி தேர்வுநிலை பேரூராட்சி உள்ளிட்ட பகுதிகளில், பல்வேறு முடிவுற்றத் திட்டப் பணிகள் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின், மகளிருக்கு இலவச பேருந்து பயணத் திட்டம், இல்லம் தேடி கல்வித் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம் உள்ளிட்ட பலவகையான திட்டங்கள் பொதுமக்களுக்காக சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. இத்தகைய திட்டங்களின் மூலம் அனைவரும் பயனடைந்திட வேண்டும்.

அதன்படி, கீரனூர் தேர்வுநிலை பேரூராட்சியில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் ரூ.87 இலட்சம் செலவிலும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.15 இலட்சம் செலவிலும் என மொத்தம் ரூ.1.02 கோடி செலவில் விரிவாக்கம் செய்யப்பட்ட கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தினையும் மற்றும் கந்தர்வக்கோட்டை பேருந்து நிலையத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் (2022-23) கீழ், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கலையரங்கத்தினையும், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற்குடையினையும் மற்றும் கறம்பக்குடி தேர்வுநிலை பேரூராட்சியில், கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.1.75 கோடி செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள, அறிஞர் அண்ணா நவீன பேருந்து நிலையத்தினையும் மற்றும் அறிஞர் அண்ணா நவீன பேருந்து நிலையம் அருகில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ், ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நூலகக் கட்டடத்தினையும் முடிவுற்றத் திட்டப் பணிகள் திறந்து வைக்கப்பட்டது.

எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படும் இது போன்ற மக்கள் நலத் திட்டங்களை அனைத்து பொதுமக்களும் உரிய முறையில் பெற்று தங்களது வாழ்வாதார முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என.அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

பின்னர் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற அடிப்படையில் எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மேலும் கிராமப்புற பொதுமக்களுக்குத் தேவையான சாலைவசதி, மின்விளக்கு வசதி, குடிநீர் வசதி உள்ளிட்டவைகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அந்த வகையில், கீரனூர் தேர்வுநிலை பேரூராட்சி, கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் மற்றும் கறம்பக்குடி தேர்வுநிலை பேரூராட்சி உள்ளிட்ட பகுதிகளில், பல்வேறு முடிவுற்றத் திட்டப் பணிகளும் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் வாழ்வாதாரம் முன்னேற்றமடைவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள். எனவே தமிழக அரசால் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டப் பணிகளை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன்தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், பொதுமக்களின் நலன் காக்கும் அரசாக தமிழக அரசு செயல்பட்டு, பொதுமக்களுக்காக பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன்படி, பல்வேறு முடிவுற்றத் திட்டப் பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது

எனவே தமிழக அரசால் மேற்கொள்ளப்படும் நலத் திட்டங்களை அனைத்து பொதுமக்களும் அறிந்து கொண்டு, தங்களை சுற்றியுள்ளவர்களிடமும் திட்டங்கள் குறித்து எடுத்துரைக்க வேண்டும் என அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), மருத்துவர் வை.முத்துராஜா (புதுக்கோட்டை), பேரூராட்சித் தலைவர்கள் த.ஜெயமீரா ரவிக்குமார் (கீரனூர்), உ.முருகேசன் (கறம்பக்குடி), புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், ஒன்றியக்குழுத் தலைவர்கள் கார்த்திக் (எ) இரா.ரெத்தினவேல் (கந்தர்வக்கோட்டை), மாலா ராஜேந்திரதுரை (கறம்பக்குடி), பாண்டிச்செல்வி கே.ஆர்.என்.போஸ் (குன்றாண்டார்கோவில்), அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) (திருச்சிராப்பள்ளி மண்டலம்) தா.காளியப்பன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த. சந்திரசேகரன், அமைப்பு சாரா தொழிலாளர் மற்றும் உடல் உழைப்பு தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் திருமதி.பெ.தெய்வானை, பேரூராட்சி துணைத் தலைவர்கள் எம்.ஏ.எம்.முகமது இம்தியாஸ் (கீரனூர்), மு. நைனாமுகமது (கறம்பக்குடி), மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் த.செல்வம், குன்றாண்டார் கோவில் முன்னாள் ஒன்றியக்குழுத் தலைவர் என். சேட்டு, அரசு வழக்கறிஞர் ப.அண்ணாத்துரை, அட்மா கமிட்டி தலைவர்கள் ஓ. எஸ்.வெங்கடாசலம், வெ. முத்துக்கிருஷ்ணன், பேரூராட்சி செயல் அலுவலர்கள் மு.செ.கணேசன் (பொன்னமராவதி), அ.சரவணன் (பொ) (கீரனூர்), வி.கார்த்திகேயன் (கறம்பக்குடி), ஊராட்சிமன்றத் தலைவர் எம்.பரமசிவம், கே ஆர். என்.போஸ், ஆ.செந்தில், தென்னலூர் எம்.பழனியப்பன், மகேஸ்வரி சண்முகநாதன், மு.க. ராமகிருஷ்ணன், சி.சண்முகம், சக்தி ராமசாமி, எல்.குமார், கே.எஸ். ரவி. எம்.எம்.பாலு, கே.எம். கே.ரவிக்குமார், வி.எஸ். பழனி, குளத்தூர் மணிராஜன், கனகம்மன் பாபு, யு.எம்.கிருஷ்ணமூர்த்தி உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தி.மு.க. வழக்கறிஞர்கள் பிரிவு கட்டளைமையம்(WAR ROOM) ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் வழக்கறிஞர் அணி தெற்கு மாவட்ட அமைப்பாளர் முத்துக்குமார் வரவேற்பில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை துறை அமைச்சர் சு .முத்துசாமி தலைமையில் என்.ஆர்.இளங்கோவன் தொடங்கி வைத்தார். நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராஜ், ஈரோடு வடக்கு மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம், கழக வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர்கள் சு.ராதாகிருஷ்ணன், கே.எஸ்.ரவிச்சந்திரன், சட்டத்துறை துணை செயலாளர் ஜெ.பச்சையப்பன், கழக தலைமை வழக்கறிஞர் கே.ஜெ.சரவணன், ஈரோடு தெற்கு வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் சி.துளசிமணி, எம்.முருகேசன் ஆர்.ராமகிருஷ்ணன், எம்.சரவணன், ஆ.பிரபு, வி.முத்துமுத்தையா, எல். ஜெகதீஸ்குமார், பி.எஸ்.கணேசன், ஆர்.செந்தில்குமரன் ஏ.கே.மதியழகன், வி.எஸ்.சரவணபவா, இ.செந்தில்குமார், தேவராஜ், ஆர்.நளினா, மாநகர வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ரவீந்திரன், ஈரோடு வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணிஅமைப்பாளர் ஆர்.ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை நகராட்சி, புதுக்குளத்தில், ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் மேம்பாட்டுப் பணிகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், 15.03.2024 அன்று அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா அவர்கள், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, நகராட்சி ஆணையர் (புதுக்கோட்டை/அறந்தாங்கி (பொ)) திருமதி.ஷியாமளா, நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### திருவரங்குளம் - அறந்தாங்கி ஒன்றியங்களில் மாணவ - மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

# பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து - புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் !

### அமைச்சர் சி.வீ.மெய்யநாதன் நாட்டினார்!

புதுக்கோட்டை, மார்ச் 19-

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கீரமங்கலம் பேரூராட்சிப் பகுதிகளில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 14.03.2024 அன்று மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி, பல்வேறு முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்காக எண்ணற்ற பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் கிராமப்புறங்களில் வாழும் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக, சாலை வசதி, குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி உள்ளிட்டவைகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, இன்றையதினம் திருவரங்குளம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கீரமங்கலம் பேரூராட்சிப் பகுதிகளில், மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி, பல்வேறு முடிவுற்றதிட்டப்பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அதன்படி, திருவரங்குளம்ஊராட்சி ஒன்றியம், பாத்தம்பட்டியில், ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில், புதிய மின்மாற்றியினையும் மற்றும் கீரமங்கலம் பேரூராட்சி, காசிம் புதுப்பேட்டை பகுதியில், புதிய மின்மாற்றியினையும் மற்றும் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், செரியாளூர் கிழக்கு பகுதியில், புதிய மின்மாற்றியினையும் முடிவுற்றத் திட்டப் பணிகள் துவக்கி வைக்கப்பட்டது. இதன்மூலம் இப்பகுதிகளில் உள்ள மின் அழுத்த மாறுபாடு சரிசெய்யப்பட்டு நிறைவான மின்அழுத்தம் வழங்கப்படும்.

இதனை இப்பகுதி பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாஞ்சான்விடுதி ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ், ரூ.43.88 லட்சம் மதிப்பீட்டிலான பணிகள் மற்றும் கொத்தக்கோட்டை ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ், ரூ.48.72 லட்சம் மதிப்பீட்டிலான பணிகள் மற்றும் நெடுவாசல் மேற்கு ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ், ரூ.41.31 லட்சம் மதிப்பீட்டிலான பணிகள் உள்ளிட்ட புதிய திட்டப் பணிகள் அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டது. இப்பணிகளை தொடர்புடைய அலுவலர்கள் விரைவாகவும், தரமாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், சிலட்டூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 57 மாணவர்களுக்கும், 74 மாணவிகளுக்கும் மற்றும் பூவைமாநகர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 29 மாணவர்களுக்கும், 24 மாணவிகளுக்கும் என மொத்தம் 184 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது. இந்த விலையில்லா மிதிவண்டிகளை மாணவ, மாணவிகள் நாள்தோறும் பயன்படுத்துவதன் மூலம் பள்ளிக்கு உரிய நேரத்திற்குள் சென்று வருவது மட்டுமல்லாமல், உடல் ஆரோக்கியத்திற்கும் பேருதவியாக அமைகிறது.

எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படும் இது போன்ற திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், அரசு அலுவலர்கள் ராஜேஸ்வரி, வள்ளியம்மை தங்கமணி, மகேஸ்வரி சண்முகநாதன், என்.நடராஜன், திருநாவுக்கரசு, குமாரவேலன், ஆர். லூர்து சகாயராஜ், இளையராஜா, மகாதேவ ராஜா, செல்வ ராஜசோழன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார் கோயில் ஒன்றியம் முக்கரும்பூர் ஊராட்சியில் ரூ. 1.40 கோடி மதிப்பில் கட்டப்பட்ட ஊராட்சி செயலகம் கட்டிடத்தை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தொடங்கி வைத்தார். உடன் மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் குழு தலைவர் நந்தினிஸ்ரீதர், ஒன்றியக் குழு துணைத்தலைவர் சௌரிராஜன் மற்றும் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே.என்.செல்வராஜ்

**மார்ச் 19 (2021)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கும்பகோணம் நகரத்தில் கொட்டையூர் பகுதியில் இருபது ஆண்டுகள் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

மூன்று முறை நகர்மன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

குடந்தை வாணி விலாச சபா செயலாளராகவும், பொருளாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**